நாயும் அதன் இனங்களும்

DOG AND ITS FAMILY

வெஸ்லியன் கல் க் தமிழ்ப் பண்டிதர்

பி. ஆர். ராஜ . ாமணியாரால்

எழு ட்டது

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD RANGOON COLOMBO

Price, 2½ Annas] 1928 [1 E. 2 M.

முன்னுரை

திருவோங்கிய தென்னாட்டிற் பல்லான்ற செந்தமிழ்ப் பனுவல்
உலவாநின்றன. அவற்றுள் அஞ்சொற்புலவர் இசைப்ப
னாற விளங்குந் தொன்னூற்களும் பல்கலை பயின்ற மேதையர்
ந்த்த தமிழாராய்ச்சி நூற்களும் என்றுங்குன்றாப் பேரொளி
ப்புஞ் செஞ்சுடரோன்மான நானிலத்திலங்கி யழிவுறாதன. அ[illegible]
க விந்நாட்பள்ளிச் சிறாரைப் பயிற்றுதற்கென எங்கணுந் தழைத்த
பதிப்பாலைகள் வெளியிடும் பள்ளிப்பனுவற்களும் பணியின்றிச்
சாம்பியிருப்பார்க்குச் சிற்றின்பச் சுவை யூட்டிக் கற்பனைக்கனவு
ட்டும் நாவலெனப் பெயர் புனைந்திலங்கு நவீனங்களும் நாள்தோ
வம் பெருகாநின்றன. பள்ளிச் சிறார்க்கென்று வெளியாகுந் தமிழ்
ற்களுட் பெரும்பாலன பழைய நூற்களைச் சீரழியப் புதுக்குவன
னும் புதுமுறை கொண்டன. மணிமேகலை யென்னிற் பல்வகை
புரைநடையிற் புதுக்கிய சுருக்கம் பல காணலாகும். இங்ஙனமே
னைய நூற்களுமாம். பண்டை நூற்களினருமை பெருமைகளைத்
தமிழ்ச்சிறுவர் பயில்வது இன்றியமையாததேயாம். எனினும்
அவற்றினையே பயிறல் வேண்டுமென வற்புறுத்துதல் பொருந்தா
தெனத் தோன்றுகின்றது. ஒரு காலத்தில் நம்நாட்டினர் பிறநாட்
ரோடு பெரிது முறவாடாது தம் மனச்சுவரகத்தே மறைந்து
ந்தனர். இந்நாளிலோ, மனித சமூகம் தன்மட்டிலேயே நில்
உலகத்துச் சராசர மனத்தோடு முறவாடு நிலைபெற்றது.
தனது அறிவு இயற்கையின் அற்புத இரகசியங்களைக் கண்ட
தாலன்றி இயற்கையோடு ஒற்றுமைப்படமுடியாது. மனிதன்
பேதாபேதம் தவிர்த்து நிச்சலதத்துவத்தை யடையவேண்டுமெ
னின், எப்பொருளிலும் மெய்ப்பொருள் காண்டல்வேண்டும். அங்
ஙனமாயின் தத்துவ ஞானத்திற்கும் ஆத்தும ஞானத்திற்கும் செல்
லும் பாதையில் அமைந்த இயற்கையின் ஞானத்தை மனிதன்
பெற்றே தீரவேண்டும். இயற்கை ஞானம் மனிதனதுள்ளத்தை

முன்னுரை

விரித்து உலகோடு தொடர்புடுத்திச் சமாசநிலையை யளி
ஆதலால், இயற்கையின் இரகசியங்களை விளக்கும் பனுவல்கள்
தமிழில் ஏற்படுவது இன்றியமையாததாகும். அத்தகைய நூ
ளைத் தமிழ்ச் சிறுவர் சிறுமியர் யாவரும் கற்கவேண்டுமென்ப
இன்றியமையாததாகும். இது பற்றியே யான் சில காலமா
தமிழன்னைக் கடிமையாகித் தொண்டு பூண்டேன். அத்தொ
டினான் வெளிப்பட்ட இம்முதற் பயனை வெளிக் கொணர்
றேன். தமிழ்ப் புலமை சான்ற பெரியார் இதற்கண் பிழை
காண்பரேல், இவ்வேழையேன்மீது அருள்கூர்ந்து திருத்தித்
மாறு வேண்டுகின்றேன். அத்துடன் எனது நன்னோக்கத்தை
பாராட்டி இதனை ஆதரிக்குமாறு பெரிதும் விழைகின்றேன்.

ப. ரா. ரா

3-

பொருளடக்கம்

ய.	பக்கம்
யின் தனித்தன்மை	1
யும், நாகரீகம் படைத்த புராதன தேசங்களும்	3
ாய்க்கும் மனிதனுக்கும் உள்ள ஆதி உறவு	5
னிதனுக்கும் நாய்க்கும் எப்படி உறவேற்பட்டது ...	6
ாய்களின் ஆதி பிதாக்கள்	10
மந்தைநாயும், அதன் திறமைவாய்ந்த ஊழியமும்	13
செமாய்ட்ஸ் ஜாதியாருடைய நாய்	15
மந்தை நாய்களின் அறிவு...	16
நாயின் பல இனங்கள்	18
ஆல்ப்ஸ் மலைகளில் பிரயாணிகளுக்கு உதவிபுரியும் நாய்கள் ...	20
நாய் ஓர் சுமை இழுக்கும் பிராணி	22
மகாயுத்தத்தில் நாய்கள் செய்த உதவி	24
ஓனுய்	26
நரி	34
கழுதைக்குடத்தி	38

-4-

நாயும் அதன் இனமும்

DOG AND ITS FAMILY

அத்தியாயம் 1

நாயின் தனித்தன்மை

நாம் எல்லோரும் நன்கறிவதும் ஏறக்குறைய எல்லா
களிலும் காணப்படுவதுமான சாதாரண மிருகங்களில்
ப முக்கியமானது. எக்காலத்திலும் எந்த ஜாதியாரிடை
ம், நாயும் அதைப்பற்றிய கதைகளுமுலவி வருகின்றன.
வுலகத்தில் மனிதனுக்குப் பெரிதும் பயன்படுகின்ற

நன்கு பழகிய மிருகங்களுள் நாயும் ஒன்றாம். வீட்டை
காத்து எப்பொழுதும் நிழல்போலப் பின்பற்றிச் செல்
மோர் நாயை நேசித்து அதனோடு உறவாடப் பழகுமோ
வன் அதைவிட்டுப் பிரிய ஒருபொழுதும் விரும்பான்.

நன்றியறிதல் என்னும் தன்மைக்கு ஒப்புயர்வற்ற அ
குறியாய்விளங்கு மிருகம் நாயேயன்றோ? அது மனித
நேசிக்கத்தலைப்படின், அதன் நன்றியறிதலாதிய உணர்ச்சிக
எதனாலும் மாற்றமுடியாது. கொடுமையாய் நடத்துவதா
பட்டினியிட்டு வருத்துவதாலும் அதன் அன்பு அழிவுறா
இதுபற்றியே ஆன்றோரும், 'நாயனையார் கேண்மை கெழீ
கொளல் வேண்டும்' என்று நமக்குப் போதித்தனர்போ

மனிதன் எவ்வளவு எளிய நிலையில் வாழ்ந்திட்டாலு
வறுமையிற்பட்டுழன்றிடினும், அவன் வளர்க்கும் நாய் அவ
விட்டகலாது. அது, தன் யஜமானின் அன்பை நினைத்
அவன் உண்டு மிகுந்த எச்சிலை மகிழ்ச்சியோடுண்
நாயை மிகச் சிறப்பாய் வளர்ப்பவர்கள், தம் தாழ்வுகாலத்தி
அது எங்ஙனம் அளவுகடந்த கஷ்டங்களைத் தம்மோடு அ
பவிக்கும் வல்லமையுடையதென்பதைச் சிறிதுமே யுணர
தன்னை யன்பொடு பராமரிப்பவரை வெகுகாலமட்டும் மற
திருப்பதோடு, அது அவர்களைவிட்டுப் பலநாள் பிரிந்திருந்
மறுபடியும் காண நேரிடுமாயின் உடனேமுகமறிந்து வா
குழைக்கும்; ஒருவர்மீதுவைத்த நேசத்தை மறந்து வே
ருவரை நேசிக்க எளிதில் இணங்காது; புதியவரிடத்தி
சென்று வாழநேரிடின் தான் இழந்த யஜமானனை நினைத்
கித்தவித்து உயிர்துறக்கினும் துறக்கும்; வெகுதூரத்
கப்பால் முற்பழக்கமில்லாததோர் ஊரில் விட்டுவரினு
வெகுதூரம் நடந்தலைந்து தன் பழைய எஜமானனைக் க
டைய முயலும்.

நாயும், நாகரிகம்படைத்த புராதன தேசங்களும்

நாம் மிகப் புராதன நூற்களில் நாய்களைக்குறித்து வாசிக்கின்றோம். இருக்குவேதம், ஏழாவது மண்டலம், 55-வது பாசுரத்தில் வீட்டைப் பாதுகாக்கும் நாயைப்பற்றிய விவரம் வெகு அழகாகக் குறிக்கப்பட்டுள்ளது. மகாபாரதத்தில், தருமரோடு தேவலோகத்திற்குச் சென்ற நான்கு சகோதரர்களும், திரௌபதியும் வழியிலே விழுந்திறக்க, அவர்களைப் பின்பற்றிச்சென்ற நாய்மட்டும் தருமரைத் தொடர்ந்து சென்றதாகப் பார்க்கின்றோம். அந்த நாயின் விசுவாசத்தை யென்னென்றுரைப்பது? அது யமனைப்போலத் தவறாது அவருடன் சென்றதன்றோ? மகாபாரதத்தில் நாயைப் பற்றிய கதைகள் பலவுள. பண்டைத் தமிழ்நூற்களிலும் நாயைப்பற்றிய விவரங்கள் பலவிடங்களிற் காணப்படுகின்றன. புறநானூறில், 74-வது பாட்டிலிருந்து, தமிழ் நாட்டில் நாயைச் சங்கிலிகளாற் கட்டும் வழக்கமிருந்ததெனத் தெரியவருகின்றது. பண்டைத் தமிழ்நூலாகிய பத்துப்பாட்டிலுள்ள, பெரும்பாணாற்றுப் படையிலிருந்தும், குறிஞ்சிப் பாட்டிலிருந்தும் நாயை வேட்டையாடுவதற்கும் வீட்டைக் காப்பதற்கும் உபயோகித்து வந்தனர் என்று அறிகிறோம். பட்டணத்துப் பிள்ளையார், 'நாயாய்ப் பிறந்திடின் நல் வேட்டையாடி நலம்புரியும்' என்று கூறியுள்ளார். இப்படியே பல பழைய நூற்களிலிருந்து, நம்மவர் நாயைப் பெரிதும் மதித்து அதை ஓர் அரிய மிருகமாகக் கருதி வந்தனர் என்று தெரியவருகின்றது.

நம் முன்னோர் முற்காலங்களில், நாயின் பல இனங்களையும் அதன் தன்மைகளையும் செவ்வனே அறிந்திருத்தல் கூடும் என்று துணிதற்கிடமுண்டு. எனினும், நாய்களின்

தன்மைகளைச் செம்மையாய் விளக்கும் கதைகளெவையும் பழைய நூற்களிற் காணப்படவில்லை. பாரதத்தில் தருமரைப் பின்பற்றிச்சென்ற நாயினிடத்தில் அதற்குரிய தன்மை சிறிது விளங்குகின்றதெனினும், அது முடிவிலே தன் சுயரூபமான யமனுருவத்தை யெடுத்துக்கொள்ளும் பொழுது, கதையின் சுவை கெட்டுப்போகின்றது. நம் முன்னோர் நாய்களின் தன்மைகளை விளக்கும் கதைகள் பல எழுதாததற்குக் காரணம், அவர்கள் எப்பொழுதும் ஆத்ம ஞானத்தையே பெரிதெனக் கருதி வந்ததேயாம். நாய்களின் தன்மைகளை ஒரு பொருட்டாகக் கருதி அவற்றை விளக்கும் கதைகளை யெழுதுவது அவர்களுக்கு முக்கிய விஷயமாய்த் தோன்றவில்லை.

இனி, புராதன எகிப்தியருடைய கோயிற் சுவர்களில் வரையப்பட்டுள்ள படங்களிலிருந்து, அவர்கள் நாயை வேட்டையாடுவதற்கு உபயோகித்து வந்தனர் என்று தெரியவருகின்றது. அஸிரியர்களும் உரோமர்களும் நாயை நன்கு பழக்கி அதைப் பெரிதும் மதித்துவந்தனர். உரோமர்கள் நவீனகாலத்தில் பிரான்சுதேசமென் றறியப்படும்கால்தேசத்தாரோடு போர்செய்தபொழுது, ப்லட் ஹௌண்டு எனும் மோப்பமறியும் நாயை உபயோகித்தனர் என்று உரோம சரித்திராசிரியன் ஒருவன் கூறுகின்றான். இவ்வுலகத்தில் மதகாஸ்கர், நியூஸீலந்து, பாலினீஷியன் தீவுகள் என்ற சில இடங்களைத்தவிர நாயில்லாத தேசங்களுமில்லை; நாயோடு பழகாத ஜனசமூகமுமில்லை.



நாய்க்கும் மனிதனுக்குமுள்ள ஆதி உறவு

மனிதனுக்கும் நாய்க்குமுள்ள உறவு மிகப் புராதனமாகையால், நாய் எப்படி வந்தது என்பதே மாயமாயிருக்கின்றது. ஒருகால் அவை காட்டு நாய்களாக விருக்கலாமென்று நினைப்பதற்கிடமுண்டு. ஆனால் அங்ஙனம் நினைப்பது முற்றிலும் தவறு. மிருகங்களுடைய ஆதிப் பிறப்பு விஷயங்களைக்குறித்து நன்கறிந்த பண்டிதர்கள் காட்டு நாய்கள்கூடப் பழகிய நாய்களுடைய சந்ததிகளென்றும் அவை ஆதரிப்பார் ஒருவருமின்றிக் காட்டிற்சென்று வயிறு வளர்க்கும்பொருட்டு வேட்டையாடித் திரிகின்றனவென்றும் கூறுகின்றனர். நாம் அறிந்த பல்வகையான நாய்களும், ஒரு காலத்தில் ஓநாய்களும் நரிகளுமாக விருந்தனவென்று கூறுகின்றனர். இஃதென்ன விந்தை? நம்மிடத்து அன்புபாராட்டி நன்றியறிதலோடிருக்கும் இம்மிருகம் கொடிய ஓநாயும் வஞ்சக நரியுமாக விருந்ததென்று கூறுவது நம்பத்தகுந்த

தோர் விஷயமாமோ? என்றாலும் இவ்விஷயங்களை நன்கு ஆராய்ந்த பண்டிதர்கள் கூறுகின்ற நியாயங்களைக்கொண்டு பார்க்குமிடத்து நம்பவேண்டியதாய்த்தானிருக்கின்றது.

நீங்கள் இனி எப்பொழுதாவது ஒரு பொருட்காட்சி சாலைக்குப்போக நேர்ந்தால் அங்குள்ள ஓநாய், நாய், நரி இவற்றின் எலும்புக்கூடுகளைக் கவனித்துப் பாருங்கள். அவை இன்னின்ன பிராணிகளின் எலும்புக்கூடுகளென்று எவரேனும் கூறினாலன்றி நீங்கள் வெகு எளிதில் தெரிந்துகொள்ள முடியாது. ஒரு நாய் படுத்துறங்கப்போகுமுன் சுற்றிச் சுருண்டு படுப்பதை நாம் பன்முறையும் பார்த்திருக்கின்றோம். இதற்குக் காரணம் என்னவென்று நாம் எப்பொழுதாயினும் சிந்தித்ததுண்டா? இனி என்றேனும் ஒரு நாய் சுருண்டு மடங்கிப் படுப்பதைப் பார்க்கும்போது, அதன் இனமாகிய ஓநாயும் நரியும் அவ்வாறே இன்றும் அந்த வழக்கத்தைக் கைவிடாது அனுஷ்டித்து வருகின்றதென்பதையும், நாயும் அதை மறந்துபோகவில்லையென்பதையும் மறவாதிருப்போமாக.

மனிதனுக்கும் நாய்க்கும் எப்படி உறவேற்பட்டது?

எப்படி மனிதனுக்கும் நாய்க்கும் இந்த உறவேற்பட்டதென்பது அடுத்த கேள்வியாம். தற்காலம் நாம் காண்கின்ற நாய்களின் ஆதி மூதாதையர்களை மனிதன் எப்படிப் பழக்கினான்? மனிதனுக்கும் நாய்க்கும் உறவேற்பட்டு எண்ணிறந்த வருஷங்களாயின. அந்த உறவு எக்காலத்திலேற்பட்டதென்றறிய வேண்டுமாயின், நாம் பூமியிலுள்ள விலங்குகளின் ஆதிகாலத்துச் சரித்திரத்தையே ஆராயவேண்டும். மிருக ஆராய்ச்சியை நாம் சமீபத்திலேதான் தொடங்கினோம்; ஆதலால் நமக்குத் தேவையான எல்லா ஆராய்ச்சித்

தத்துவங்களும் இன்னும் முற்றுப்பெறவில்லை. என்றாலும் உள்ளதை வைத்துக்கொண்டு பார்க்குமிடத்து உண்மை ஒருவாறு புலப்படுகின்றது.

ஆதிகாலத்தில் மனிதன் நிலத்தைப் பயிர்செய்து ஜீவனம் செய்யவில்லை. அவன் தானியங்களை விதைக்கவுமில்லை; காய் கறிச் செடிகளை நடவுமில்லை. ஆனால் அவன் நாளடைவில் சில பழங்களும் பருப்புக்களும், ஆகாரத்துக்குவேண்டியவையென்று கண்டுகொண்டான். வருங்காலத்திற்கென்று ஆகாரத்தைச் சேகரித்துப் பாதுகாக்கும் சில மிருகங்களைப்பே

லவே அவனும் சிற்சில சமயங்களில் மறுநாளுக்கு வேண்டிய உணவுப்பொருள்களைச் சேகரித்து வைத்துக்கொண்டனன். எனினும் அதை ஒழுங்காகவும் கிரமமாகவும் தேவையான அளவிற்குஞ் சேகரிக்க முயன்றிலன். ஏனெனின் அவனுடைய களஞ்சியத்தையும், வீட்டையும் அவனிலும் வல்லவர்கள் வந்து அபகரிப்பதற்கும், மிருகங்கள் வந்து அவனுடைய வீட்டைத் தமது வாழ்விடமாக்குவதற்கும் பல வழிகளிருந்தன. எந்த மனிதனும் தான் சேகரிக்கும் பொருள்கள் தனக்குப் பயன்படுமென்றறிந்தாலன்றி அதனை யீட்டத் துணியான். இத்தகைய முகாந்தரங்களால் ஆதிகாலத்து மனிதன், 'கையிலே காசு வாயிலே தோசை' யென்று ஜீவித்திருப்பானெனத் தோன்றுகின்றது. வருஷத்தின் பல மாதங்களிலும் தனக்குத் தேவையான சில முக்கிய உணவுப்பொருள்கள் கிட்டாதபோது மாமிசபக்ஷணத்தையே எதிர்பார்த்து ஜீவிக்கவேண்டியதாயிற்று. சீதோஷ்ணத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும்பொருட்டு அவன் தன் உணவிற்கென்று கொல்லும் மிருகங்களுடைய தோல்களை உபயோகிப்பானாயினான்.

மனிதன் பூமியில் தோன்றிய நாள் முதலாய்ப் பலகால மட்டும் வேடுவனாயிருந்தான் என்று பார்க்கிறோம். அவன் வெகுகாலம் மாமிச பக்ஷிணிகளான விலங்குகளோடு போராடி ஜீவிக்க நேரிட்டது. கொடிய விலங்குகள் மனிதனை ஒழித்துவிட முயன்றன. மனிதன் தன் வல்லமையினாலும் அறிவினாலும் அவற்றை மேற்கொண்டாளமுயன்றான். அங்ஙனம் அவன் மேற்கொள்ள முயன்ற விலங்குகளனைத்தும் நாயின் உறவினங்களாம். நரியொன்று நீங்கலாகப் பிற விலங்குகளெல்லாம் தமக்குப் பசியெடுத்த காலத்தில் கூட்டமாகச் சேர்ந்து ஒரு மிருகத்தை வேட்டையாடி யுண்ணும். இப்படி ஒன்றுகூடி வேட்டையாடுவதினால், அவை தம்மினும் பெரிய மிருகங்களைக் கொன்று தின்னுமாற்றலுடையன.

மனிதனைப் பெரிய மிருகங்களிலொருவனாகக் கருதமுடியாது. என்றாலும், ஓநாய்கள், தங்களில் ஒரு தனி மிருகத்தை மனிதன் வெகு வெளிதில் தாக்கமுடியுமென்று ணர்ந்து கொண்டன. எனினும் மனிதன் பெருந்திரளான ஓநாய்களை ஒருபோதும் எதிர்த்து நிற்கமுடியாது. ஆசியாகண்டத்திலும், ருஷியா தேசத்திலும் ஐரோப்பாக்கண்டத்திலும், இன்றும் ஓநாய்கள் கூட்டமாய்க்கூடி மனிதனைத் தாக்கிக்கொன்று தின்றுவருகின்றன.

ஆயினும், எந்த மிருகமும் மனிதனுக்கு நிகரன்று. அவன் தன் இரண்டு காலால் ஓடி நாலு கால் மிருகங்களை வெல்ல முடியாது; எனினும், அவனுக்கு மகா அற்புதங்களைச் செய்யவல்ல இருகரங்களிருக்கின்றன. அவன் வெகு சீக்கிரம் தனக்கு இயல்பாய் அமைந்த இருகைகள் என்னும் ஆயுதங்களைப் பிரயோகிக்கத் தொடங்கினதோடு பல புதிய ஆயுதங்களையும் உண்டுபண்ணக் கற்றுக்கொண்டான்; ஒரு கதாயுதத்தை வீசி யெறியவும், கூரிய குந்தங்களைப் பிரயோகிக்கவும், கற்களை யெறிந்து தன்னை எதிர்த்தவைகளைக் கொல்லவும் பழகினான். இத்தகைய தனி வல்லமைகள் மற்றப் படைப்புக்களினும் அவனைச் சிறப்பித்துக் காட்டின. மற்ற விலங்குகளோ, தம் பகைவர்களைச் சமீபத்திற்சென்று தாக்கவேண்டும். ஆனால் மனிதனோ ஒரு மிருகத்தின் அருகிற் செல்லாமலே தன்னறிவினால் நிருமித்த ஓர் கருவியைப் பிரயோகித்து அதைக் கொன்று வீழ்த்தக்கூடும்.

மேலும், மனிதன் தன் உணவிற்குசிதமான மிருகங்கள் சாகபக்ஷிணிகளே யாமென வெகு சீக்கிரத்திலுணர்ந்து கொண்டனன். மாமிச பக்ஷிணிகளாகிய மிருகங்கள் தன்னை யெதிர்த்தாலன்றித் தான் அவற்றைத் துன்புறுத்தலாகா தென்பதே அவன் நோக்கமாயிருந்தது. ஆனால் மனிதன் எந்த மிருகங்களைத் தன் உணவிற்கென்று நாடினானோ அதே மிருகங்களை நாயினத்தைச் சார்ந்த மாமிச பக்ஷிணிகளும்

நாடலாயின. மனிதன் தான் உண்டு மிகுத்த மாமிசத்தை யும் எலும்புகளையும் இன்னொரு வேளைக்கென்று மறைத்து வைக்கும்பொழுது நாயினத்தைச் சார்ந்த மிருகங்கள் அவன் ஒளித்து வைத்தவற்றைத் தேடித் தின்றுவிடும்.

நாய்களின் ஆதி பிதாக்கள்

மிருகங்கள் ஒன்றுசேர்ந்து தங்களது உணவிற்காகும் மிருகத்தை யெதிர்க்கும் திறனுடையனபோலவே மனிதரும் ஒன்றுசேர்ந்து, தம் பகைவரை யெதிர்க்கும் திறனுடையரா

வர். ஆதலால் நரிகளும், ஓநாய்களும் மிக்க தைரியத்தோடு எதிர்க்க வருகையில் நம்மாதி பிதாக்கள் ஒன்றுகூடி அம் மிருகங்களை வெகு தூரத்திற்கப்பால் துரத்திவிடுவார்கள். இவ்வாறு அவ்விலங்குகளைத் துரத்தி யடிக்குங்கால், அவை வாழும் பிலங்களையும் தாக்குவார்கள். அப்பிலங்களில் நரிகளும் ஓநாய்களு மீன்ற குட்டிகளிருக்கக் கண்டால், அவற்றை உணவிற்காகப் பிடித்துக்கொண்டு வருவார்கள். இவர்களுக்குப் பெரிய நாய்களுடைய மாமிசம் உணவிற்குப் பொருத்தமுடையதாக இராவிடினும் சிறு குட்டிகளுடைய ஊன் ஒருவாறு புசித்தற்குசிதமானதாகவே யிருந்திருக்கும். இப்படிப் பிடித்துக்கொண்டு வந்த சிறு குட்டிகளோடு ஆதி காலத்துச் சிறுவர் சிறுமியர்கள் விளையாடுவார்கள். நாளடைவில் அக்குழந்தைகளுக்கும் விலங்கின் குட்டிகளுக்கும் ஒருவகையான நட்புண்டானதுபோலும். ஆதலால் அவர்கள் தங்கள் பெற்றோரிடம் அச்சிறு குட்டிகளை உணவிற்கென்று கொல்லாது தங்களுக்கே தந்துவிடுமாறு மன்றாடினர். பெற்றோர்களும் தம் சிறுவர்களின் வேண்டுகோட்கிணங்கி அச்சிறு குட்டிகளைக் கொல்லாதிருந்தனர். இதன் பின்னர், சிறுவர்கள் தங்களுக்கியல்பான தன்மைப்படியே தமக்குக் கிடைக்கும் உணவுப்பொருள்களி லொரு பாகத்தை அச்சிறு குட்டிகளுக்கும் பகிர்ந்துகொடுத்து அவற்றை நேசிக்க வாரம்பித்தனர். நாய்களோடு நன்குபழகி அவற்றின் தன்மைகளைச் செவ்வனே ஆராய்ந்த அறிஞர்கள், குட்டிப் பருவத்திலே காட்டப்படும் அன்பினால், இவ்விலங்குகள் பெரியவையாகும்பொழுது, எங்ஙனம் தம் பிரகிருதி சுபாவத்தை முற்றிலும் மாற்றி மனிதனுக்கேற்ற ஓர் துணையாய் விடுகின்றன வென்பதை நன்கறிவார்கள். அவ்வாறே, முன்னொரு காலத்தில் ஓநாய், நரியெனும் இருஜாதி விலங்குகள், தம்பால் மனிதன் காட்டிய அன்பினால், தமது கொடுந் தன்மையை யடக்கிக்கொண்டு, தமக்குப் பட்சம் காட்டிய

மனிதன்பால் உண்மையும், நன்றியறிதலும் உள்ளனவா யிருக்கத் தலைப்பட்டன. நாளடைவில் அவை தம் எஜமான னுக்கு வேட்டையாடுவதிலும் உதவிபுரியலாயின. இவ் வாறு நாய் நரிகள் தமக்கு மிகவும் உதவுவதைக் கண்ட ஆதிகாலத்துக் காட்டாளர்கள் அவற்றை இன்னுமதிகமாகப் பிடித்துக்கொண்டுவந்து பழக்க வாரம்பித்தனர். காலக்கிர மத்தில் இவ்வாறு பழக்கப்பட்ட குட்டிகள் பெரிதாகி, காட்டினங்களோடு சேராது, மனிதனுற் பழக்கப்பட்ட இனங்களோடு சேர்ந்து குட்டிகளைப்பெற்று ஒரு புதிய ஜாதியான விலங்கைப் படைக்கவாரம்பித்தன. நாய் வளர்ப் பதில் அநுபவமுள்ளவர்கள், இரண்டு வேறு வேறுன ஜாதி நாய்களைச் சேர்த்து எவ்வளவு சீக்கிரம் ஓர் புதிய நாயினத்தை உண்டுபண்ணக்கூடுமென்பதை நன்கறிவார்கள். சில மேனுட்டு ஸ்திரீகள் மாலையில் கடற்கரைக்கு உலாவவருகை யில் தங்களோடு மோட்டார் வண்டியில் சிறிய உருவ முடைய சில நாய்களைக்கொண்டு வருவதை நான் பல பொழுதும் கண்டதுண்டு. நான் வெகுநாள்மட்டும் அவற்றை நாய்க் குட்டிகளென்றே கருதியிருந்தேன். ஆனுல் அவை குட்டிகளன்று. அந்த நாய்கள் அவ்வளவுதான் வளரும். சிலகாலமாக ஜப்பானிய, சீன, பொமரானியதேசத்துச் சிறிய நாய்களைச் சேர்த்து உருவத்தில் அத்துணைச் சிறுத்த ஓர் நாயினத்தை உண்டுபண்ணினர் என்று இப்பொழுது எனக்கு நன்ருய்த் தெரியும். ஆதலால் நன்கு பழகிய ஓநாய்களும் நரிகளும் தம்முருவத்தையும்குணத்தையும் மாற்றிக்கொண்டு, காலக்கிரமத்தில் தமது மூதாதைகளாகிய காட்டினங்களி லிருந்து முற்றிலும் வேறுபட்டு நவீனகாலத்தில் மனிதனுக் குறவான நாயினங்களாகிவிட்டன என்று தோன்றுகின்றது.

வெகு சீக்கிரத்தில் மனிதனுக்கும் நாய்க்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டுவிட்டது. நாய் மனிதனுடைய வாழ்வு தாழ்விற் பங்குகொள்ளும் ஓர் விலங்காயிற்று. நாய் மனித

னுக்காக வேட்டையாட, மனிதன் காட்டு விலங்குகளைக் கொன்று அந்த இறைச்சியால் தன் ஊனை வளர்க்கத்தொடங்கினதோடு அதையும் வளர்த்து அதற்குத் தன்னோடு வாழ இடமும் அளித்து வரலாயினன்.

மங்கைநாயும் அதன் திறமைவாய்ந்த ஊழியமும்

மனிதனுக்கும் நாய்க்கும் ஏற்பட்ட நட்புக் குறையாது நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வந்தது. மனிதன் நாகரிகம் பெற்றோங்க வேட்டையாடாமலே ஜீவிக்கும் நிலையையடைந்தபோது, நாயின் உதவியை எதிர்பாராத நிலைக்கு வந்துவிட்டான். என்றாலும், அநேக தேசங்களில் தற்கால நாகரீகத்திற் புரண்டோடும் நகரங்களுக்கும் பட்டணங்களுக்குமப்பால், வெகுதூரத்திலுள்ள நாட்டுப்புறங்களிலும்

மலைப்பிரதேசங்களிலும் காடுகளிலும் மனிதனுக்கும் நாய்க்குமுள்ள உறவு இன்றும் அற்றுப்போகவில்லை. மலைப்பிரதேசத்தில் ஆடுமேய்க்கு மிடையன் நாயின் துணையின்றித் தன் வேலையைச் செய்யமுடியாதென்று தோன்றுகின்றது. ஆட்டு மந்தையைச் சார்ந்த நாய் மந்தையிலுள்ள ஆடுகளை இடையனிலும் நன்றாய் அறியும் என்பதற்கு ஐயமில்லை. ஒரு ஆடு, தன் மந்தையை விட்டு வேறொரு மந்தையை அடைந்தாலும், மந்தை நாய் அதைக் கொண்டுவந்து மறுபடியும் தன் யஜமானனுடைய மந்தையோடு சேர்க்கும்; பனிமூடிய மாலைப்பொழுதில் குன்றின்மீது அங்கு மிங்கும் சிதறியோடிப்போன ஆடுகளை மறுபடியும் கூட்டிச் சேர்த்து அவற்றை ஊருக்கு ஓட்டிக்கொண்டு போகும். தப்பிப்போன ஆட்டுக்குட்டியையாவது ஆட்டையாவது தேடிக் கண்டு அதற்கு எத்தகைய தீங்கும் நேரிடாதவாறு மறுபடியும் மந்தையிற் சேர்க்கும்.

எல்லா நாய்களிலும் ஆட்டு மந்தை நாயே மனிதனுக்கு மிகவும் உபயோகமான பிராணியென்று தோன்றுகின்றது. மந்தை நாய்களோடு நன்றாய்ப் பழகியவர்கள் அது தனக்கு நியமிக்கப்பட்ட வேலையை வெகு சாக்கிரதையாகச் செய்து வருகின்றதெனக் கண்டிருக்கின்றனர். அது இடையனை மிகவும் நேசிப்பதோடு தனக்குக் கிடைத்த வேலையை மிகவும் முக்கியமானதென்று கருதி அதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கின்றது. பல தேசங்களிலுள்ள மந்தை நாய்கள் உருவத்திலும் தன்மையிலும் மாறுபட்டவையெனினும் அவை அந்தந்த மந்தைகளுக்கு விசேஷித்த ஒரு பாதுகாப்பாகவே யிருக்கின்றன. ஒருகால் இவை ஆதிகாலத்தில் ஆட்டுமந்தைகளைக் கொடிய விலங்குகளினின்று ரட்சிப்பதற்கென்று உபயோகப்படுத்தின நாய்களின் சந்ததிகளாயிருக்கலாம். அந்த நாய்க்குட்டிகளில் சிறந்த அறிவுடையனவைகள் மாத்திரமே மந்தை நாய்களாகப் பராமரிக்கப்பட்

டன. நாளடைவில் இவை ஆட்டு மந்தைகளை ஒன்றாய்த் திரட்டி வீட்டிற்கு ஓட்டிக்கொண்டு போக நன்றாய்ப் பழக்கப்பட்டனபோலும். இந்த நாய்களின் திறமையைக் கண்ணாரக்கண்டவர்களன்றிப் பிறரெவரும் உணரமுடியாது. நன்றாய்ப் பழகியதும் மிகவும் சுறுசுறுப்புள்ளதுமான மந்தை நாய் மிக்க வியப்பை விளைக்கும். அது தன் எஜமானனின் ஒவ்வொரு கைஜாடையையும், குரல் வேற்றுமையையும், வெகு விரைவாய் உணர்ந்து தனக்கு இடப்பட்ட கட்டளைப்படி உடனுக்குடனே செய்ய வேண்டுவனவற்றைச் செவ்வனே செய்துமுடிக்கும்; மந்தையில் ஓர் ஆடு சிறிது பின் தாங்குமாயின் தாழ்ந்த குரலிற் குரைத்து மறுபடியும் அதை மந்தையோடு சேர்க்கும்.

சேமாய்ட்ஸ் ஜாதியாருடைய நாய்

சைபீரியா தேசத்தில் உள்ள சேமாய்ட்ஸ் ஜாதியார் காப்பாற்றிவருகின்ற நாய் மந்தை நாயினத்தைச் சேர்ந்ததெனினும், அந்நாட்டினருக்கு ஆட்டுமந்தைகள் இல்லையாதலால் அவர்கள் தங்களுடைய மான் கூட்டங்களைப் பாதுகாக்க

நாய்களை உபயோகிக்கின்றனர். இந்நாய்கள் மான் கூட்டங்களைக் காப்பாற்றப் பயன்படுவதோடு தங்கள் எஜமானர்கள் பத்திரமாய்க் கடந்து செல்வதற்கு நதிகளில் நல்ல துறைகளைக் கண்டறிவதற்கும் கோடைகாலத்தில் படகுகளைக் கரையோரமாக இழுத்துக்கொண்டு போகிறதற்கும், குளிர் காலத்தில் சரக்கு வண்டிகளை இழுப்பதற்கும், சீல், காடி காட்டுவாத்து முதலிய பிராணிகளை வேட்டையாடுகிறதற்கும் பிரயோஜனப்படுகின்றன. இந்நாய்களில் காணப்படும் ஓர் விசேஷமென்னவெனில், ஒரு நாய்த் தொகுதியில் ஒரு நாயைத் தலையாகத் தெரிந்து அதை மற்ற நாய்களுக்கெல்லாம் பிரதானியாக்கும் ஓர் வழக்கமேயாம்.

மந்தை நாய்களின் அறிவு

மந்தை நாய்களைக் குறித்து எண்ணிறந்த கதைகள் உள. அவற்றில் ஒன்றிரண்டை இங்குக் குறிப்பிடுகின்றோம். சில ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கா தேசத்தில் ஓர் ஆட்டிடையன் இறந்துபோக அந்தச் சமாசாரம் இரண்டு நாட்கள் மட்டும் தெரியாமலே இருந்துவிட்டது. அந்த மந்தையைச் சேர்ந்த நாய்கள் தங்கள் எஜமானன் இறந்த செய்தி அறியாது வழக்கம்போல மந்தையை மேய்ச்சலிடத்திற்கு ஓட்டிக்கொண்டுபோய், ஆடுகள் மேய்ந்தபின்னர் அவற்றை மறுபடியும் வீட்டிற்குத் திருப்பிக்கொண்டுவந்தன. இப்படியே அவை தம் எஜமானன் இல்லாமலே தங்கள் வேலையைச் சரிவரச் செய்து வந்தனவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்காத்லாந்து தேசத்தில் ஆட்டிடையனாகிய ஹாக் என்ற கவியினிடம் ஓர் மந்தை நாயிருந்தது. ஒருநாள் பனிக்காலத்தில் ஹாக்கினுடைய ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்த

இடத்தில் திடீரென்று பனிப்புசலடிக்கவாரம்பித்தது. அப்பொழுது ஹாக் தன் நாயை அழைத்து அதை மந்தையோடு ஒரு வழியாக அனுப்பிவிட்டு அவன் வேறு வழியாகத் தன் வீட்டிற்குப் புறப்பட்டான். இரவு வெகுநேரம் சென்ற பிறகு ஹாக் தன்னுடைய பாதி மந்தை ஆடுகளை வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்தான். ஆனால் தன் நாய்மட்டும் வரக் கண்டிலன். வெகுநேரம் சென்றபிறகு கதவில் பறண்டுகிற ஓசையும், சிறு குரைப்பொலியும் கேட்டன. உடனே அவன் கதவைத்திறந்து பார்த்தபொழுது தன்னுடைய மந்தையின் மற்றொரு பாதி ஆடுகள் எத்தகைய சேதமுமின்றி க்ஷேமமாய் வந்திருக்கக் கண்டான். கதவண்டையில் அந்த நாய் தன் வாயில் ஒரு சிறு குட்டியைக் கவ்விக்கொண்டு நின்றது. பனி பெய்த பிரதேசத்தில் தான் ஈன்ற குட்டியை

அவன் காலண்டை வைத்தபின், மறுபடியும் வெகுவிரை வாய்ப் பனிமூடிய பிரதேசத்திற்கு ஓடிச்சென்று அங்குத் தான் ஈன்றிருந்த இன்னொரு நாய்க்குட்டியையும் எடுத்துக் கொண்டு ஓடோடியும் வந்து அதையும் தன் எஜமானன் காலண்டை வைத்தது. இந்தக் கதையில் உள்ள நாயின் விசுவாசத்தையும் அதற்குத் தன் குட்டிகள் மீதுள்ள அன்பையும் எடுத்துக்காட்ட எத்தகைய வியாக்கியானமும் தேவையில்லை.

நாயின் பல இனங்கள்

நாய்களிற் பல இனங்களையும் அவற்றிற்குள்ள பெயரை யும் நம் நாட்டில் தற்காலத்தவர் அறியாதிருப்பது என்ன பரிதாபம்! மேனாட்டார் நம்மைப்பார்த்து, நாயின் அரிய பெரிய குணங்களை உணரும் தன்மையில்லாதவர்கள் என்று எண்ணும்படியான நிலைமைக்கு வந்துவிட்டோம். நம் முன்னோர்கள் நாயைப் பெரிதும் பாராட்டி வந்திருக்க, எக்காலத்தில் யாதுகாரணம்பற்றி நாய்க்கு நம் நாட்டில் இழிவு ஏற்பட்டதோ தெரியவில்லை. ஒருகால் மகம்மதியர் கள் தம் மார்க்க சம்பந்தமான கொள்கைப்படித் தாம் நாயி டத்திற் பாராட்டி வந்த வெறுப்பை நமக்கும் புகட்டி நம்மை யும் நாய்க்கு விரோதிகளாக்கிவிட்டனரோ?

எங்ஙனமாயினும், இன்றும் நம் தேசத்தில் மலைப்பிர தேசங்களிலும், கிராமாந்தரங்களிலும் நாயைப் பெரிதும் மதித்து அவற்றின் பல இனங்களைப் பல சொற்களால் வழங்கிவருகின்றனர். கொடைக்கானல், நீலகிரி முதலிய மலைப்பிரதேசங்களிலுள்ள கிராமங்களில் வாழுகின்றவர்கள் வேட்டைக்காகப் பல நாய்களை வளர்த்து வருகின்றனர். அவர்கள் நாய்களின் பல இனங்களைக் குறிப்பிடப் பல சொற்கள் வழங்குகின்றனர். தென்னிந்தியாவிலே செங்

73



கோட்டை என்னுமிடத்தில் ஒரு ஜாதி நாய் உண்டு. அதைப் பழக்கினால் அது வெகு நன்றாய் வேட்டையாடுகிறதென்று அங்குள்ள மறவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த இனத்தைக் கோம்பை என்று அழைக்கிறார்கள். அதே ஜாதி நாயைக் கொடைக்கானலிலுள்ள கிராமவாசிகள் புலிச் சூரன் என்றழைக்கிறார்கள். இந்த நாய் உருவத்திலும் தன்மையிலும் ஏறக்குறைய ஆங்கிலேயர்களுடைய கிரே ஹவுண்டைப் போலிருக்கின்றது. இப்படியே பல இடங்களில் வழங்குகிற பல ஜாதி நாய்களின் பெயரையும் அப் பெயர்கள் குறிப்பிடும் இனத்தையும் மேல்நாட்டாருக்குள் காணப்படும் பல இனங்களோடு ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து, கீழ்க்குறித்துள்ள தமிழ்ப் பெயர்களையுடைய நாய்கள் சில மேனாட்டு நாய்களோடு ஏறக்குறைய ஒத்திருக்கின்றன. ஆனால், மேனாடுகளிற் காணப்படும் அநேக நாயினங்கள் நம்

நாட்டிற் காணப்படவில்லை. உச்சி (Pointer) ஞாளி (Setter) சுணங்கன் (Retriever) குக்கன் (Terrier), நரிச்சூரன் (Fox-hound) முடுவல் (Blood-hound) முதலியன நம் நாட்டிலும் இருந்தன. இக்காலத்தில் இப்பெயர்களனைத்தும் பொதுப்பட நாய்களை உணர்த்தும் சொற்களாகக் கருதப்படுகின்றன. ஏனெனின், நாயோடு பழகுகின்றவர்கள், நாளடைவில் மேற்கூறிய பெயர்கள் குறிப்பிடும் இனங்களை உணரா தொழிந்தனர். பிறநாட்டாருள் நாயின் தன்மையை விளக்கப் பற்பல கதைகளிருக்க, நம்மவர்கள் சமீபகாலத்தில், 'நாயைக் கண்டால் கல்லைக் காணவில்லை; கல்லைக் கண்டால் நாயைக் காணவில்லை' என்றவைபோன்ற பல பழமொழிகளை ஏராளமாகச் சிறுவயது முதற்கொண்டே நமக்குக் கற்பிக்கின்றனர். அந்தோ! இஃதென்ன பரிதாபம்.

ஆல்ப்ஸ் மலைகளில் பிரயாணிகளுக்கு உதவிபுரியும் நாய்கள்

சில நாய்கள் ஆடுகளைக் காப்பாற்றுது வேறு வேலைகள் செய்கின்றன. ஐரோப்பாக் கண்டத்தில் ஆல்ப்ஸ் மலைகளிலுள்ள ஸெண்ட் பர்னார்டு நாய்கள் எண்ணற்ற மனிதர்களை மரணத்திலிருந்து தப்பவைத்திருக்கின்றன. அன்பு மிக்க சந்நியாசிகள், பனி மூடிய மலைப்பிரதேசத்திற் களைத்துச் சோர்ந்துவிழும் பிரயாணிகளைக் காப்பாற்றுமாறு அந்நாய்களைப் பழக்கியுள்ளனர். அந்நாய்கள் மனிதர்களுக்குத் தாமிருக்குமிடத்தை உணர்த்தி, அவர்களுக்கு உதவிபுரியுமாறு வெகுதூரம் மட்டும் கேட்கும்படி குரைத்துக்கொண்டு மலைப்பிரதேசமெங்கும் திரியும். அவை வெளியே போகும் பொழுது சிறிது தின்பண்டம் நிறைந்த சிறு மரப்பெட்டியொன்று கழுத்தில் கட்டப்பட்டனவாய்ச் செல்கின்றன. இந்த நாய்களில் பாரி என்றொரு நாய் நாற்பது பிரயாணிகளைக் காப்பாற்றியதாம். ஓர் தருணம் அது, பனியில் விறைத்

துக்கிடந்த ஓர் குழந்தையைக் கண்டு, அதன் முகத்தை நாவால் நக்கி யெழுப்பி அருகாமையிற் படுத்துத் தன் முதுகின்மேல் அதையேற்றிக்கொண்டு வந்து சன்னியாசிகளிடம் சேர்த்ததாக எழுதியிருக்கிறது.

பாரி என்ற நாயின் இனத்தைச் சேர்ந்தவை தாம் காப்பாற்றுகின்ற மனிதர்களையே தாக்கிக் கொல்லவல்ல அத்துணைப் பெரிய மிருகங்களென்று கூறுகின்றனர். ஒரு நாள் ஒரு மனிதன், பல மனிதர்களைக் காப்பாற்றிய பாரியைக் கண்டு அது தன்னைக் கொல்லவருகின்றதெனக் கருதி அதைக் கொன்றுவிட்டான். அவன் ஓர் பெரிய மூடனாய் இருக்கவேண்டும். இந்த நாயைக் குழித்து மூடிய இடத்தில் ஓர் கல்லின்மேல், 'நாற்பது உயிர்களைக் காப்பாற்றி நாற்பத்தோராவது மனிதனாற் கொல்லப்பட்ட மகாவீரனாகிய

பாரி' என்று எழுதப்பட்டிருக்கின்றது. இந்நாட்களில் ஸெண்ட் பர்னார்டு நாய்களின் உதவியில்லாமலே ரயில்வண்டியிற் பிரயாணம்செய்து ஆல்ப்ஸ் மலைகளுக்குச் செல்லலாம். என்றாலும், இந்நாய்கள் இன்றும் தம் வேலையைச் சரிவரச் செய்து அம்மலைகளில் வழியிழக்கும் பல பிரயாணிகளைக் காப்பாற்றிவருகின்றன.

நாய் ஓர்சுமை இழுக்கும் பிராணி

ஆதிகாலத்து மனிதர்கள் பல கருவிகள் செய்து அவைகளை உபயோகித்துத் தங்கள் சாமான்களை ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்குக் கொண்டுபோகச் சிறு வண்டிகள் செய்தபொழுது, அவர்கள் அந்த வண்டிகளை இழுக்க முதன்முதலாக உபயோகித்த மிருகம் நாய்தான். பிரயாணிகள் எஸ்கிமோ ஜாதியாரை முதன்முதலாகச் சந்தித்த

பொழுது, அச்சாதியார் நாயைச் சுமையிழுக்கும் பிராணியாக உபயோகிப்பதைக் கண்டனர்.

நம்முடைய நாய்கள் முன்னொருகாலத்தில் எப்படியிருந்திருக்குமென்பதை எஸ்கிமோ ஜாதியாரிடமிருக்கும் நாய்கள் நமக்குத் தெளிவாய்க் காட்டுகின்றன. அந்த நாய்கள் வட அமெரிக்காவிலிருந்தாலும், தென்னமெரிக்காவிலிருந்தாலும், சைபீரியாவிலிருந்தாலும், கம்சாட்காவிலிருந்தாலும் எங்கேயிருந்தாலும், எந்தக் குளிர்தேசத்தைச் சார்ந்திருப்பினும் அவை குணத்திலும் உருவத்திலும் தன்மையிலும் சற்றேறக்குறையப் பழகிய நாயைப்போலவே காணப்படுகின்றன. இந்த நாய்களைச் சுயேச்சையாக விட்டுவிட்டால், இவை தன்னிஷ்டப்படி ஓநாய்களோடு கலந்துகொள்கின்றன. அன்றியும் அமெரிக்காவின் வடதுருவத்தில் எத்தனை நிஜமான எஸ்கிமோ நாய்கள் இருக்கின்றனவோ அத்தனை ஓநாய்களும் இருக்கின்றன. வடபாகத்திற் சென்று பார்க்கும்பொழுது நம்முடைய முன்னோர்கள் எப்படி நாய்களோடு வாழ்ந்தார்கள் என்கிற விஷயம் சிறிது தெரியவருகின்றது. எஸ்கிமோ ஜாதியார்கள் ஓரிடத்தைவிட்டு வேறொரு இடத்திற்சென்று தங்குவதற்கு நாய்கள் மிகவும் அவசியம். இந்த நாய்கள் தங்கள் பகல் வேலையைச் செய்தபிறகு இரவில் முற்றிலும் காட்டு விலங்குகளுக்கு ஒப்பாகிவிடுகின்றன. மாலையில் தங்கள் வேலைக்குக் கூலியாக எஜமானர்கள் தரும் கொஞ்சம் மீனைத்தின்று சிறிது பனிக்கட்டியையும் விழுங்கித் தங்கள் இராப்போஜனத்தை முடித்துக்கொள்கின்றன. மறுநாள் காலையில் எஜமானர்கள் மறுபடியும் மீன் கொடுக்குமட்டும் அவற்றிற்கு எவ்விதமான உணவும் கிடைப்பதில்லை. இன்னுமதிகம் வேண்டுமென்றால் அவை வேட்டையாடித் தங்கள் வயிற்றை நிறைத்துக்கொள்ள வேண்டும். அவை எப்பொழுதும் பசியுள்ள மிருகங்களாகையால் இரவெல்லாம் வேட்டையாடுவதில் தங்கள் காலத்

தைப் போக்குகின்றன. இதனுல் இந்த நாய்கள் இருக்கிற இடத்தில் ஆடுகளையாவது பறவைகளையாவது வைத்துக் காப்பாற்றுவது முடியாத காரியம். அவை இரவில் தம் கைக்கு அகப்படும் எந்த மிருகத்தையும் கொன்று தின்பதோடு, ஒன்றை ஒன்று எதிர்த்து வெகு கோரமாய்ச் சண்டையிடும். டாக்டர் நான்ஸன் என்பவர் வடதுருவத்தைக் காணச் சென்றிருந்தபோது இக்காரணத்தால் தன் நாய்களிற் பலவற்றை இழக்க நேரிட்டது. அவர் அவைகளை இரவில் அவிழ்த்துவிட்டபொழுது அவை ஒன்ருெடொன்று சண்டையிட்டுச் சண்டையில் பின்வாங்குகிற நாயைக் கொன்று தின்றன. எஸ்கிமோ நாய்கள் மிகவும் கோரமானவை. எனினும் தம் எஜமானர்களிடம் உண்மையாய் இருப்பதோடு அறிவிலும் ஆட்டுமந்தை நாய்களுக்குச் சமானமாயிருக்கின்றன.

மகா யுத்தகாலத்தில் நாய்கள் செய்த உதவி

சென்ற மகாயுத்தம் ஆரம்பித்த உடனே அலாஸ்கா தேசத்திலுள்ள மலமியுட்ஸ் என்ற ஜாதி நாய்களை வாஸ்ஜஸ் மலைகளுக்கு அனுப்பினுர்கள். அந்த நாய்கள் யுத்தகளத்திலிருந்த பிரான்சு படைகளுக்கு வெடிமருந்தும் உணவும் கொண்டுவந்து கொடுத்து மிகவும் உதவின. ஒரு பிரான்சு தேசத்து நூலாசிரியர் இது விஷயமாகக் கூறுமிடத்து, 'ஒன்பது நாய்கள், ஆறு குதிரைகள் சேர்ந்து ஒரு நல்ல பாதையில் இழுக்கக்கூடாத பாரத்தை கரடுமுரடான பாதையில் வெகு சுலபமாக இழுத்துக்கொண்டு வந்தன. அந்த நாய்களில் ஒரு கூட்டம் நாய்கள் ஒரு குன்றைச்சுற்றித் தினந்தோறும் பிரயாணம் பண்ணவேண்டுவனவாய் இருந்தன. இப்படி அவைகள் தினந்தோறும் செய்துகொண்டு வருகையில் ஒருநாள் அந்த நாய்கள் தங்களை வழிநடத்திக் கொண்டுபோன

மானர்களுக்குத் தெரியாத ஒரு குறுக்குப் பாதை வழியாகத் திடீரென்று திரும்பித் தாங்கள் போய்ச் சேரவேண்டிய இடத்தை அடைந்தன' என்று எழுதியுள்ளார். யுத்த காலத்தில் நாய்களைப் பலவிதமாக உபயோகித்தனர். பெல்ஜியம் தேசத்திலும் ஹாலண்டு தேசத்திலும் மணற் பிரதேசங்கள் வழியாகச் சிறு பீரங்கிகளை இழுத்துக்கொண்டு வர நாய்கள் உபயோகிக்கப்பட்டன. இதை அத்துணைப் பெரிய ஓர் வேலையாகக் கருத இடமில்லை. அவை பாளயத்தைக் காக்க மிகவும் உபயோகப்படுத்தப்பட்டன. திடீரென்று பகைவர்கள் தாக்க வரும்பொழுது அவை குரைக்காமல் அந்தச் செய்தியை தங்கள் எஜமானர்களுக்கு அறிவிக்க வெகு நன்ருய்ப் பழகியிருந்தன. அந்த நாய்கள் ஒரு இடத்திலிருந்து வேருேரிடத்திற்குச் சென்று செய்தி கொண்டு போகவும் தங்கள் எஜமானர்கள் குறிப்பிட்ட மனிதர்களைக் கண்டு அவர்களிடம் செய்தி தெரிவிக்கவும் அறிந்திருந்தன. யுத்தத்தில் காயம்பட்டவர்களை வைத்திய சாலைக்குக் கொண்டுவரும் வண்டிகளை இழுக்கச் சில நாய்களை உபயோகித்தனர். இந்த நாய்கள் பலமாய்க் காயம்பட்ட வீரர்கள் கிடக்கும் இடங்களை அப்போதைக்கப்போது தங்கள் எஜமானர்களிடம் வந்து தெரிவித்திராவிட்டால் செஞ்சிலுவைச் சங்கத்தாருடைய வேலை அவ்வளவு நன்ருய் நடைபெற்றிராது.

நாய்களில் பலவிதமான நாய்கள் உண்டென்று நாம் முன்னமே சொன்னேம். இந்த நாய்களில் பிளட்ஹௌண்டு என்ற நாய் மோப்பம் பிடிப்பதில் மிகவும் திறமையுடையது. கிரேஹௌண்டு என்ற நாய் வேட்டைகளுக்கு மிகவும் பிரயோஜனமானது.

நாய்களுடைய அறிவையும் அவைக்குண்டாய கூர்ந்த புத்தியையும் நன்றியையும் குறித்து எழுதுவதாயிருந்தால் ஓர் பெரிய புஸ்தகம் எழுதலாம். அவைகளையெல்லாம் இங்கே எழுத இடம் போதாது.

அத்தியாயம் 2

நாயின் மூதாதையர்கள்; ஓனாய்

மனிதனுக்காவது அவன் வளர்த்துவரும் பெரிய மிருகங்களுக்காவது தீங்கிழைக்கும் காட்டு மிருகங்களில் கடைசியாயிருப்பது ஓனாய். அநேக நூற்றாண்டுகளாக இங்கிலாந்து தேசத்தில் ஓனாய்கள் காணப்படவில்லை. ஆனால் அவை மற்ற ஐரோப்பிய தேசங்களில் விசேஷமாயுண்டு. அவை தரையெங்கும் உறைபனி படிந்து இரையகப்படாத காலத்தில் சமநிலங்களில் பிரவேசித்து ஆட்டுப்பட்டிகள் கழனித் தொழுவங்கள் இவைகளுக்கருகாமையிற் சஞ்சரிக்கும்; கொடிய குளிர் மிகுந்த மாரிக்காலத்தில் அவைகளுடைய சாதாரணமான உணவாகிய ஆடு அகப்படாவிடின் கூட்டம்

கூட்டமாய்ச் சேர்ந்து, மாடு, குதிரை, மனிதர் என்ற வேற்றுமையின்றிப் பசியின் கொடுமையைத் தீர்க்கும்பொருட்டுத்தாக்கும். அவை மான் மரை முதலிய மிருகங்களைத் துரத்தி வேட்டையாடும். ஓனுய்கள் மிகவும் விரைவாய் ஓடும் தன்மையுடையனவல்ல; எனினும் வெகுதூரம் மட்டும் சிறிதும் இளைக்காமல் ஓடும் வலிமையுடையன.

ஓனுய் பெரிய காட்டுநாயைப்போலவே யிருக்கும். ஓனுய் ஓயாமல் அலைந்து திரிவதால் அதற்கு அடிக்கடி உணவு தேவையாய் இருக்கின்றது. தனக்குத் தேவையான உணவைப் பெறும்பொருட்டு அதன் பஞ்சேந்திரியங்களும் எங்கே இரை கிடைக்குமோவென்று ஆராய்ந்த வண்ணமாயிருத்தல் வேண்டும். பசியால் வருந்துகின்ற காலத்தில் பசியைத் தீர்க்கும் பொருள்கள் அனைத்தையும் குறித்துக் கொள்ளுமாறு அதன் ஞாபகசக்தி பலமாயிருக்கவேண்டும்.

ஓனுய்க் குட்டிகளுக்குக் கூர்மையான பார்வையும் நுட்பமான கேள்வியும் அற்புதமான மோப்பமும் உண்டு. தமது இந்திரியங்களை உபயோகிப்பதில் மிகவும் தேர்ச்சியடையப் பெற்ற பெரிய ஓனுய்கள் தமது அனுபவத்தையும் நுண்ணறிவையும் தம் குட்டிகளுக்குக் கற்றுக்கொடுக்கும். குட்டிகள் இரண்டு மாத வளர்ச்சியடைந்ததும் ஓனுய் தன் குட்டிகளுக்குப் பாடம் கற்பிக்கத் தொடங்கும். குட்டிகள் தாயுடன் சென்று வேட்டையாடும். தாய் கொன்று வீழ்த்திய இரையைக் குட்டிகள் சின்ன பின்னமாய்க் கிழித்தெறியும். இங்ஙனம் சில நாட்கள் சென்றபின்னர் வேட்டையாடுவதில் அவை தாய்க்குப் பெருந்துணையாகின்றன. இந்நாட்களில் அவை, மான் மரைகள் மறைந்து ஒதுங்குமிடங்கள் எவையென்றும், ஒவ்வொரு மிருகத்திற்குமுள்ள விசேஷ நாற்றமெதுவென்றும் அறிகின்றன. பிறந்த ஒன்பது மாதத்திற்குப் பிறகு தாயை விட்டு நீங்கித் தனிமையாக ஜீவிக்கின்றன. தமக்கு, ஆடு, மான், மரை முதலியவற்றை

எதிர்த்துக்கொன்று தின்னும் வலிமை யேற்படுமளவும் ஆடு மாடுகளின் பிணங்களையும் சிறு மிருகங்களையும் புசித்து வளரும். ஓனுய்கள் வெகு சீக்கிரத்தில் மனிதனை அறியும் தன்மையுடையன. அவன் தமக்குப் பகை யென்ற ஞானம் அவற்றிற்கு வெகு சீக்கிரத்தில் ஏற்படுகின்றது. சிறு ஓனுய் தான் உலாவித்திரியும் வழியில் மனிதரால் வைக்கப்பட்ட பொறியில் ஒரு ஓனுய் அகப்பட்டு செத்துக்கிடப்பதைக் கண்டால் தன் ஜீவிய காலம்முழுதும் மனிதன் கையில் அகப்படாவண்ணம் எச்சரிக்கையாய் இருக்கும்பொருட்டு அக்காட்சியைத் தன் கண் முன்பாகவே வைத்துக்கொள்ளும்; பொறுக்கக்கூடாத பசியினுல் வருந்தினுலும் மனிதன் கைக்கு அகப்படாதிருத்தல் கூடுமெனத்திட்டமாய் அறியும் மட்டும் பசியின் கொடுமையைத் தீர்க்கத் துணியாது. இரவில் ஆட்டுப்பட்டியில் உலாவும்போதும், உட்சென்று தாக்கும்போதும் அபாயம் நேரிடுமென்ற எண்ணம் அதன் உள்ளத்தை விட்டகலாது. உள்ளே நாயாவது மனிதனுவது இல்லாவிட்டால் அஞ்சாது உள்ளே குதித்துப் பசி தீரும் வரையில் திருப்தியாய்ப் புசிக்கும். ஆட்டுப்பட்டியில் காவல் இருக்கக்கண்டால், தான் உள்ளே குதித்து ஒரு ஆட்டைக் கௌவிக்கொண்டு வெளியேறி ஓடமுடியுமென்று அறிந்தாலொழிய உள்ளே நுழையப் பார்க்காது. தொடர்ந்து வரும் நாய்க்குத் தப்பியோடும் சக்தியற்ற சிறு குட்டிகள் சென்ற வழியை மறைப்பதற்காக முயல்கள் செய்யும் தந்திரங்களையெல்லாம் செய்ய வழிதேடும். ஆனுல் தகுந்த வயதும் பலமும் உண்டென்று கண்டால் அது பாய்ச்சலாய்ப் பாய்ந்து காற்றுக்கு எதிர்முகமாய் ஓடிப்போகும். எந்தெந்தத் திசையில் பொறிகள் உண்டு என்றும் இல்லையென்றும் மோப்பத்தால் அறிந்துகொள்ளும். ஓனுய்கள் சாதாரணமாய்க் கூட்டம்கூடி வசிப்பதில்லை; ஆனுல் வேட்டையாடும் காலத்தில் மாத்திரம் ஒன்றுசேரும். இதற்

காக, அவை ஒன்றோடொன்று கூடிப் பேசிச் சேருவ தில்லை. ஒரு பெரிய மிருகத்தை ஒரு ஓனாய் தொடர்ந்து செல்லுவதை மற்ற ஓநாய்கள் கண்டால், துணை அவசியம் வேண்டுமென்றும், துணை போனால் வேட்டையில் தங்களுக் கும் பங்கு அகப்படுமென்றும் அறிந்து ஒன்றாய்ச் சேரும்.

இந்தியா தேசத்தில் இமயமலைச்சாரலிலிருந்து, விசேஷ மாக விரிந்த சமபூமிகளில் எங்கும் ஓனாய் உண்டு. மலைப் பாங்கான பிரதேசங்களிலும் காடு அடர்ந்த இடங்களிலும் மலையாளதேசத்திலும்ஓனாய்கள் அவ்வளவு அதிகமாய் இல்லை. ஓனாய்கள் சிந்து நதியின் வலது கரையில் காணப்படுகின்றன. ஆனால் இடதுகரையில் ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த ஓனாய்கள் காண்கின்றன. அந்த ஜாதி ஓனாய்கள் ஆசியாக் கண்டமெங்கும் பரவிக் காண்கின்றன. எனினும் அவை வங்காளக் குடாக்கடலுக்குக் கிழக்கே காணப்படவில்லை.

இந்திய ஓனாயினம் இலங்கைத்தீவிற் காணப்படவில்லை யெனினும் அவ்வினத்தைச் சேர்ந்த ஓனாய்கள் அரபி தேசத் திற் காணப்படுகின்றன. இந்திய ஓனாய்கள் ஐரோப்பிய ஓனாய்களைவிட உருவத்தில் சிறுத்திருப்பதால் அவை ஏறக் குறைய நரிகளைப்போலிருக்கின்றன. மேனாட்டு ஓனாய்களின் அடிவயிற்றிற் காணப்படும் நீண்ட மயிர் இந்திய ஓனாய்களுக் கில்லை; உடலிலும் நீண்ட மயிரில்லை. இந்நாட்டு ஓனாய்களுக் குள்ள சர்வ சாதாரணமான நிறம் மங்கின பிங்களவர்ணமே யாம். அவற்றின் முதுகில் கறுப்புநிறம் அதிகமாய்க் கலந் திருக்கும். சில ஓனாய்கள் செந்நிறமாயும், வேறு சில சிதறிய செந்நிறமுடையனவாயும் காணப்படுகின்றன. அவற்றின் உடல் வால் நீங்கலாக 36 அங்குல நீளமுடையது. வால் 17 அங்குல நீளமிருக்கும். அவை பழக்க வழக்கங்க ளில் ஏறக்குறைய ஐரோப்பிய ஓனாய்களைப் போலிருப்பினும், பெருங் கூட்டமாய்த் திரள்வதில் ஐரோப்பிய ஓனாய்களுக்கு இணையாகா. மேலும் அவை அதிகமாய்க் குரைப்பதில்லை.

சில சமயங்களில்மட்டும் தெருநாய்களைப்போல் குரைக்கின்றன.

இந்திய ஓனுய்கள் மிகவும் திறமைவாய்ந்தவை. அவற்றின் தந்திரத்தைக்குறித்துப் பல கதைகளுண்டு. சிலவேளைகளில், ஒரு ஓனுய்க்கூட்டத்தைச்சேர்ந்த சில ஓனுய்கள் ஒரு மானையோ, மரையையோ செளகரியமான இடத்தில் துரத்த ஆரம்பிக்கும். மற்ற ஓனுய்கள் பள்ளங்களிலோ, செடிப் புதர்களிலோ, பள்ளத்தாக்கிலோ அல்லது தங்கள் குழிகளிலோ பதுங்கிக் கிடக்கும்; துரத்தப்பட்ட மான் தங்கள் சமீபத்தில் வரும்பொழுது அதன்மீது பாய்ந்து விழுந்து அதைக் கொல்லும். ஓனுய்களிற் சில தமது கால்களை மேலே தூக்கிக் கொண்டு முதுகின்மேல் படுத்திருக்கும். இதன் நோக்கம் என்னவெனில், சமீபத்தில் மேய்ந்துகொண்டிருக்கிற ஓர் மான் கூட்டத்தின் பார்வையைக் கவர்ந்து அதற்கு வியப்பை உண்டுபண்ணும் பொருட்டேயாம். மான்கள் இஃதென்ன விநோதமென்று காணவரும்பொழுது, அந்த ஓனுய்கள் வெகுவிரைவாய் எழுந்து அவைமீது பாய்ந்து கொல்லும். ஒரு ஆட்டுமந்தையை எதிர்க்கும்பொழுதும், ஓனுய்கள் இரு கக்ஷியாகப் பிரிந்து வேட்டையாடும். ஒரு கட்சி, மந்தையிலுள்ள நாய்களைத் தம்மிடத்து இழுத்துக்கொண்டு அவற்றோடு போராடிக்கொண்டிருக்கும். அப்பொழுது மற்றொரு கட்சி தங்களுக்கு இஷ்டமான ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் கவர்ந்து செல்லும்.

மத்திய இந்தியாவில் ஒரு கிராமத்திற்கருகில் ஒரு கிழப் பெண் ஓனுயும் நன்றாய் வளர்ந்த ஓர் ஆண் ஓனுயுமிருந்து வந்தன. இந்த இரண்டு ஓனுய்களும் மலையடிவாரத்தில் மலையைவிட்டு ஊருக்கு இறங்குகிற பாதைக்கருகாமையில் ஓர் இடத்திற்கு அடிக்கடி வருவதுண்டு. இவ்விரு ஓனுய்களும் அடிக்கடி வந்து தங்குகிற இடத்திற்கு அருகிலுள்ள பாதையில் ஊர்ச்சிறுவர்கள் கூட்டம் கூட்டமாக விளையாடு

வார்கள். ஆண் ஓனாய் பல தருணங்களிலும் மலையடி வாரத்திலுள்ள செடிப்புதரில் மறைந்துகொள்ளும். அப்பொழுது கிழட்டு ஓனாய் பாதைவழியாக ஓடிவந்து ஓரிடத்தில் சரியான சந்தர்ப்பம் வாய்க்குமட்டும் மறைந்திருந்து, பிறகு திடீரென்று பிள்ளைகளுக்கிடையிலே பாய்ந்து ஒரு சிறுவனைத் தூக்கிக்கொண்டு ஓடிவிடும். இப்படியே அடிக்கடி நடந்தது. ஊரில் அநேகர் இதைத் தவிர்க்க முயன்றனர். பிறகு அவர்கள் ஓனாயைத் துரத்தவேண்டும் என்று தீர்மானித்தனர். அவ்வாறு அவர்கள் கிழட்டு ஓனாயைத் துரத்தும்பொழுது, அது தன் வாயில் கௌவிக்கொண்டுவந்த குழந்தையைக் கீழே போட்டுவிட்டு ஓடிப்போய்விடும். இப்படி யாவும் குழப்பமாயிருக்கையில் மலையடிவாரத்தில் பதுங்கிக்கொண்டிருக்கும் ஓனாய் ஓடிவந்து ஒரு குழந்தையை எடுத்துக்கொண்டு ஓடிவிடும். கிழட்டோனாய் கடித்தெறிந்த முதற் குழந்தையும் பிழைப்பது கஷ்டமாய்விடும். இப்படிப் பலமுறைகளில் அந்தக் கிராமத்தார் கஷ்டப்பட்டபோதிலும் அவர்கள் ஓனாய்களைக் கொல்லத் துணியவில்லை. ஏனென்றால், ஓனாயின் இரத்தம் விழுந்த நிலத்தில் ஒன்றுமே விளையாதென்ற அஞ்ஞானக்கொள்கை அவர்களுக்குள் வெகு பிரபலமாயிருந்தது. இவ்விரு மிருகங்களையும் கொன்று அக்கிராமத்தாருடைய துன்பத்தைத் தீர்க்க நினைத்த ஓர் ஆங்கிலேயனுக்கு அவர்கள் எத்தகைய உதவியும்புரிய விரும்பவில்லை.

இந்தியா தேசத்தில் ஓனாய்கள் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் மூன்று முதல் எட்டு குட்டிகளிடுகின்றன. குட்டிகள் பிறந்தவுடனே தொங்கு காதுகள் உடையனவாயிருக்கும்; பிறந்தவுடன் எட்டு ஒன்பது நாட்கள் மட்டும் கண் திறவா. ஓனாய்கள் பூமியில் உள்ள குழிகளிலும், குகைகளிலுள்ள பாறை இடுக்குகளிலும் குட்டியிடும். குட்டிப்பருவம் முதற்கொண்டே பழக்குவதாயின் அவற்றை

வெகு எளிதில் பழக்கிவிடலாம். அவை பழகினபிறகு நாய்களைப்போலவே நடந்துகொள்ளும். இந்தியா தேசத்துத் தெருநாய்களில் இந்திய ஓனாய்களின் இரத்த சம்பந்தம் காணப்படுகின்றது. சில சமயங்களில் ஓனாய்கள் கிராமத்து நாய்களோடு சேர்ந்து குட்டியிடுவதுமுண்டு. இந்தியா தேசத்து ஓனாய்களிற் சில ஆங்கிலேய நாய்களுக்கு மூதாதைகள் என்பதிற் சந்தேகமில்லை.

ஸைபீரியாவிலும் ருஷியா தேசத்திலும் வேறு பல குளிர் தேசங்களிலும் ஓனாய்கள் மனிதனை வேட்டையாடுகின்றன. உயிருக்குப் பயந்து ஓடுகின்ற குதிரைகள் எவ்வளவு வேகமாக ஓடினாலும் அந்த ஓனாய்கள் அவற்றைப் பின்தொடர்ந்து செல்லும். சில தருணங்களில் பிரயாணி தன் வண்டியில் பூட்டியிருக்கிற குதிரைகளில் ஒன்றை அவிழ்த்து அதை ஓனாய்களுக்கு இரையாக விட்டுவிட வேண்டியதாயிருக்கும். ஓனாய்கள் அந்தக் குதிரையைத் தின்று முடிப்பதற்குள் அவன் தப்பிக்கொள்ள வழிதேட வேண்டும். ஆனால் பின்தொடர்ந்துவருகிற ஓனாய்க்கூட்டம் மிகப் பெரிதாயிருப்பின், குதிரையைத் தின்னத் தலைப்பட்ட ஓனாய்களைத்தவிர மற்ற ஓனாய்கள் மேலும் மனிதனைப் பின்தொடரும். அப்பொழுது அவன் தன் துப்பாக்கியினால் சில ஓனாய்களைக் கொன்று வீழ்த்தலாம். அவ்வாறு குண்டுபட்டுச் செத்து விழுகிற ஓனாய்களை மற்ற ஓனாய்கள் தின்னத் தலைப்படும். இப்படியாக, மனிதன் தப்பித்துக்கொள்ளலாம். இத்தகைய காட்சிகள் மேற்கூறிய தேசங்களில் பலபொழுதும் நிகழ்வதுண்டு.

சமீபகாலத்தில் வட இந்தியாவில் வங்காளத்தில் ஒரு பாதிரியார், ஓனாய்கள் வளர்த்த இரண்டு குழந்தைகளைக் கண்டெடுத்து அவற்றை வளர்க்கத் தொடங்கினார். அவ்விரு பெண் குழந்தைகளில் ஒரு பெண்குழந்தை இறந்துபோ

விட்டது. இந்தக் கதையின் விரிவான செய்திகள் இந்துப் பத்திரிகையில் வெளிவந்தன. இதனால், ஓனாய்கள் சிறு குழந்தைகளைத் திருடிக்கொண்டுபோய் வளர்க்கும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. ஆனால், இதுவிஷயமாகப் பிரகிருதி சாஸ்திரிகள் பெரிதும் சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தனர். இப்பொழுது அது நிவிர்த்தியாகிவிட்டது.

ஒரு பெண் ஓனாயேனும் அல்லது ஒரு ஆண் ஓனாயேனும் பாதுகாப்பில்லாது விடப்பட்ட சிறு குழந்தையைத் திருடிக்கொண்டு தன் குட்டிகளண்டை கொண்டுவந்திருக்கும். அப்பொழுது தாய் ஓனாய் பசியில்லாதிருந்திருக்கலாம். குட்டிகள் பால்குடிக்கும் பருவத்திலிருக்கும். ஆதலால் ஓனாய்க்குட்டிகளோடு சேர்க்கப்பட்ட குழந்தை தனக்குற்ற அபாயம் இன்னதென்று அறியாமல் தாய் ஓனாயின் பக்கத்தை அணுகி அதன் மடியை வாயில்வைத்துத் தானும் குட்டிகளோடு ஒரு குட்டியாய்ப் பால்குடிக்கும். சமீபத்திலுள்ள பிரதேசங்களில் தங்களுக்கு ஏராளமான உணவு கிடைத்திருக்குமாதலால், தாய் தந்தை ஓனாய்கள் குழந்தையைத் தின்னாமல் விட்டிருக்கலாம். இவ்வாறு சிலநாட்கள் செல்ல, ஓனாய்க்குட்டிகளுக்கு மனுஷக்குழந்தை ஓர் விளையாட்டுத் தோழனாய்விடும். குட்டிகள் அக்குழந்தையையும் தங்களில் ஒன்றாகப் பாவிக்கும். பெரிய ஓனாய்களும் அதைத் தமது குட்டிகள்போலப் பாவிக்கத் தொடங்கும். நாளடைவில் அந்தக் குழந்தையும் ஓனாய்களுடைய தன்மைகளையடைந்தது. அதுவும் ஓனாய்களைப்போலவே குரைக்கத் தொடங்கியது; ஓனாய்களைப்போலவே பச்சை மாமிசத்தைப் புசிக்கலாயிற்று.

ரோமாபுரியை நிருமித்த ராமுலஸ், ரீமஸ், என்ற இரு சகோதரர்களை ஓனாய் வளர்த்ததென ஓர் பழங்கதை அந்நாட்டுச் சரித்திரத்தில் கூறப்படுகின்றது. அக்கதை வெகு

காலம்மட்டும் நம்பப்படாமலிருந்தது. ஆனால், இப்பொழுது நம் இந்தியா தேசத்தில் நடந்த உண்மையைக் காணும் பொழுது அக்கதையும் உண்மையாய் இருத்தல் கூடுமெனத் தோன்றுகிறது.

அத்தியாயம் 3

நரி

உங்களில் எத்தனை பேர் ஒரு நரியைப் பார்த்திருக்கிறீர்கள்? நீங்கள் பல நரிக்கதைகள் கேட்டிருக்கலாம். பஞ்சதந்திரமென்னும் கதைப் புத்தகத்தில் பல நரிக்கதைகள் படித்திருப்பீர்களே. அந்தப் புத்தகத்திலுள்ள நரிகளிலெல்லாம் சிறந்து விளங்குகின்ற கரடகனையும் தமனகனையும் நாம் மறக்கவேமாட்டோம்.

நாற்கால் பிராணிகளில் நரியைப்போலவும், இருகால் பிராணிகளிற் காகத்தைப்போலவும் தந்திரத்திற் பெயர் பெற்ற வேறு பிராணிகளைப் பார்க்கமுடியாது. நரி எந்த இனத்தைச் சேர்ந்தது என்று நீங்கள் அறிவீர்களா? எப்படி நாயில் பல இனங்களுண்டோ அப்படியே நரிகளிலும் தேசாவஸ்தைக்கும் சீதோஷ்ணஸ்திதிக்கும் ஏற்றவாறு பல இனங்கள் காணப்படுகின்றன. நரிகளை இரண்டு ஜாதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று குள்ளநரி. மற்றொன்று நரி.

சில கிராமங்களில் இரவில் தங்க நேரிடுமாயின், ஊருக்கு வெளியிலிருந்து ஊளைக்குரல் கேட்கும். இந்த ஊளை நரியின் ஊளையேயன்றி வேறெதுவுமன்று. குள்ளநரிகள் புசியாத பிணங்கள் இல. உயிருள்ள பிராணிகள் கிடைக்காதபோது பிணங்களைப் பிடுங்கித் தின்னும். கல்லறைகளில் ஆழமாய்ப் புதைக்கப்படாத பிணங்களைத் தோண்டித் தின்னும். நரிகளுடைய இப்பெருங் குணத்தினால் எவ்வளவு நன்மையுண்டென்று பாருங்கள். வெகு சீக்கிரம் அழுகித் துர்க்கந்தம் வீசக்கூடிய பிணங்களைப் பக்ஷித்து நிலத்தைச்

சுத்தம்பண்ணுகின்றனவன்றோ! இவை கானகத்துத்தோட்டிகளாம். புலி முதலிய மாமிச பக்ஷிணிகளாகிய மிருகங்கள் கொன்று வீழ்த்திய பிணங்கள் மிகவும் அழுகிப்போன பிறகும் நரிகள் அதைப் புசிக்கும்.

நரிகள் ஒரு வழியில் மனிதனுக்கு உதவிபுரிகின்றனவென்றாலும், அவை குடியானவர்களுக்குப் பெருந்தொல்லையாகவிருக்கின்றன. இரவிலே, சிறு ஆட்டுக்குட்டிகளையும் கோழிகளையும் வாத்துக்களையும் திருடிக்கொண்டு போகின்றன. அவற்றால் விளையும் நஷ்டமெல்லாம் மனிதரது அஜாக்கிரதையினாலேற்படுவதேயாம். மாமிசமாயினும், காய்கனிகளாயினும், பசியாற்றக்கூடிய எதையும் குள்ளநரிகள் புசிக்கும். காப்பிப் பழங்களைத் தின்னும்; கடற்கரையோரத்தில் நண்டுகளைப் பிடித்துத் தின்னும். சில கடற்கரைகளில் நண்டுகளைப் பிடித்துத் தின்னும்பொருட்டுத் திரிந்த நரிகளின் அடிச்சுவடுகளைக் காணலாம். மலையாளதேசத்துச் சிறுவர்கள் நரியின் நண்டு வேட்டையைக் குறித்து ஒரு பாட்டுப்பாடி அதன்முடிவிலே நரிபோல ஊளையிட்டு முடிப்பார்கள். குள்ளநரிகள் சாதாரணமாகக் கூட்டம் கூட்டமாய்த் திரிவதில்லை. சில சமயங்களில்மட்டும் சிறு கூட்டமாகக்கூடி இரைதேடச் செல்லும்.

நரிகள் இந்நாட்டில் எல்லாப் பாகங்களிலும் காணப்படுகின்றன. அவை குள்ளநரிகளைவிட உருவத்திற் சிறியதாயும் சாம்பல்நிறமுடையதாயுமிருக்கும். அதன் உணவு, காடை, கௌதாரி, தரைநண்டு முதலிய ஜந்துக்களும், மூலாம்பழம், கொம்மட்டி முதலிய கனிவகைகளுமாம். ஐரோப்பிய நரியைப்போலவே செந்நிறமுடைய பெரிய ஜாதி நரிகள் இமயமலையடிவாரங்களில் உள. நரிகள் தங்களுக்கு அபாயம் நேரிடுமென்று தாம் திரிகிற இடங்களி

னும் வாழ்கிற இடங்களிலும் பல குழிகள் தோண்டி வளை கள்பண்ணி வைத்துக்கொள்ளும். ஒரு நரி தங்குகிற வளைக்குப் பல வாசல்கள் உள. நரி வேட்டையாடுகிறவர் கள் அந்தக் குழி வாய்களையெல்லாம் அடைத்தாலொழிய வேட்டையாடுவது அரிது. நரி இரவில் இரைதேடப் போகும்போது, வேடுவர்கள், அது தங்கும் குழிகளையெல் லாம் அடைத்துவிடுவார்கள். அப்பொழுது அது தன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தப்ப வழிதேடி யோடும். நரியினுடைய வாலின் கீழாக நாற்றத்தைத்தரும் ஒருவகையான பிசினை வெளியே கொண்டுவரும் நரம்புண்டு. அது, எத்திசையாய்ச் சென்றால், தன் மோப்பம் கூடிய மட்டும் குறையுமோ, அத்திசையாய் ஓடிப் பலதரமும் தன் பகையினிடமிருந்து தப்பிப்பிழைக்கும். மேலும் தனக்குள்ள அபாயங்கள் எவையென்று புதிது புதிதாய் அறிந்துகொள் ளும். பிராணிகளுள் இதைப்போல எச்சரிக்கையுள்ளதும், வலைபொறி முதலியவை எங்கெங்கு இருக்குமோவென்று சமுசயப்படுவதுமான மிருகம் வேறொன்றில்லை. அது பதி விருந்து குழிமுயலைப் பிடித்துத் தின்று வயிறு வளர்க்கும். ஆனால் குழிமுயல்கள் எளிதிலகப்படுவனவல்ல. நரிகள் கோழிகளுள்ள வீட்டுச் சுவர்களுக்கருகில் வளைதோண்டுவ துண்டு. நரிக்குக்கொழுத்த வாத்தைப்போல் சிறந்த உணவு வேறொன்றுமில்லை. நரிகளைச் சிறியவையாயிருக்கும் பொழுதே பிடித்தால் இலேசாய்ப் பழக்கிவிடலாம். என் றாலும் அவற்றின் அடங்காத குணம் அவற்றைவிட்டுப் போகாது. ஆனால், இரண்டு மூன்று தலைமுறை அடிமைத் தனத்தில் இருந்துவிட்டால் பிறகு அது நாயைப்போல் உண்மையாய் இருக்கும். நரிகள் பெரிதும் இரவிற் திரியும் பிராணிகளேயாம்.

அத்தியாயம் 4

கழுதைக்குடத்தி

கழுதைக்குடத்தி அல்லது கழுதைப்புலி யென்பது முற்காலத்தில் ஐரோப்பாக் கண்டத்தின் பல பாகங்களிலும் ஆசியா கண்டத்தில் சீனதேசம்மட்டும் பரவியிருந்தது. இந் நாட்களில் அது ஆப்பிரிக்கா முதல் இந்தியாதேசம் உட்பட எல்லா உஷ்ணதேசங்களிலும் இது காணப்படுகின்றது. கழுதைக் குடத்தியினங்களில் இப்பொழுது காணப்படுகின்ற மூன்று ஜாதியில் வரிக்கழுதைப்புலிமட்டுமே ஆப்பிரிக்கா தேசத்திலும் இந்தியாவிலும் காணப்படுகின்றது. புள்ளிக் கழுதைக்குடத்தியும் தவிட்டுநிறக் கழுதைக்குடத்தியும் ஆப்பிரிக்கா தேசத்தில்மட்டுந்தான் காணப்படுகின்றன. இந்நாட்களில், வரிக்கழுதைப்புலி இந்தியாவின் வடமாகாணங்களிலும் மத்திய மாகாணங்களிலும் ஏராளமாய் உண்டு. தென் வங்காளத்தில் அவ்வளவாய்க் காணப்படவில்லை. இலங்கை

யில் அவை யில்லை. அது இந்தியாவிலும், பலூசி... பாரசிகம், மெஸபெத்தோமியா, காக்கஸஸ் மலைப்பிர... கள், அரபிதேசம், சீரியா, பலஸ்தீனா என்னும் நாடுகளி... ஆப்ரிக்கா கண்டத்தில் எகிப்து, அபசீனியா, சகாராப்பாலைவனத்திற்கு வடபாகத்திலுள்ள பிரதேசங்கள், மத்திய ஆப்ரிக்கா எனுமிடங்களிலும் காணப்படுகின்றது.

கழுதைக்குடத்தி குறுகிய கழுத்தும் உயர்ந்த தோள் மூட்டும் உடைய குரூபியான ஓர் மிருகம். அதன் தாடைகள் பெரிய எலும்புகளை வெகு சுலபமாய்க் கடித்து நொறுக்கும் வலிமையுடையன. இம்மிருகமும் குள்ளநரியைப் போலவே, செத்துக்கிடக்கும் ஆடுமாடுகளையும் தப்பித் தவறிவரும் நாயையும் ஆட்டையும் புசிக்கும்.

வரிக்கழுதைக்குடத்தி மூக்கு நுனியிலிருந்து வால் நுனி மட்டும் 5 அடி நீளமிருக்கும். அதற்குப் பெரிய கூரிய காதுகளும், தலையிலிருந்து நீண்டமயிருடைய வாலினடி மட்டும் வளர்ந்த பிடரிமயிரும் உண்டு. அதன் பின்னங் கால்கள் முன்னங்கால்களைவிடக் குறுகியும், சிறுத்த பாதங் களுடையனவாயுமிருக்கும். அதன் உடல் அழுக்கான சாம்பல் நிறமுடையதாம். பக்கத்திலும் கால்களிலும் கறுத்த கோடுகளிருக்கும். இந்தக் கழுதைக்குடத்திகள் குன்றுகள் சிதறிய விசாலமான மலைப்பிரதேசங்களை விரும்புகின்றன. அவை மணற்காடுகளிலும் வசிக்கும். அவை சீரியா, பலஸ்தீனா தேசத்தில் பாறைகளிலுள்ள கல்லறைக் குகைகளில் வாழ்கின்றன. இந்தியாவில் அவை பலபொழுதும் பாழான கட்டிடங்கள் சிதறிக்கிடக்கும் பிரதேசங்களில் திரிகின்றன. குகைகளிலும் பாறைகளின் இடுக்குகளிலும் பதுங்கி உறைகின்றன. பொதுவாக, அவை அலைந்து திரிந்து உணவு தேடும் மிருகங்கள். சில சமயங்களில் அவை அதிகாலையிலும் பின் மாலையிலும் வெளிப்படுவன; இரவில் வெகுதூரமட்டும் அலைந்து திரிவன. இந்த மிருகங்கள் நடந்துபோன

வெகு எளிதில் கண்டறியலாம். அவற்றின் சுவடுகள் நாயின்காலடிச் சுவடுகளைப்போலிருக்கும். , அந்த அடிச்சுவடுகளில் பின்பாதச் சுவடுகள் முன் டிச் சுவடுகளிலும் சிறியதாய்க் காணப்படுவதிலிருந் நடந்துசென்ற மிருகம் எதுவென்று வெகு எளிதில் பு படும். கழுதைக்குடத்திகள் எப்பொழுதும் ஏகாந்தமா ஜீவியம் உடையவை. ஓரிடத்தில் ஒன்றிரண்டிற்குமே காணமுடியாது.

ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள புள்ளிக் கழுதைக்குட வரிக்கழுதைக்குடத்தியைவிட மிகவும் பயங்கரமான அது வசிக்கும் பிரதேசங்களுக்கருகில், கூடாரத்திற்குப் பக்கத்தில் காப்பிரிகள் தீ மூட்டிக்கொண்டு படுத்துறங்குவார்கள். அப்பொழுது அந்த மிருகம் அவர்களுடைய முகத்தைக் கீறிக் கிழித்துவிடும். இப்படி உண்டான காயம் அவ்வூரில் பலர் முகத்திலும் காணலாம். கூடவிருப்பவர்கள் அதை ஓட்டாவிட்டால், அதனிடமிருந்து உயிர் தப்புவது அசாத்தியம். அந்த மிருகம் இரவில் அட்டகாசமாய்க் கூச்சலிடுவதால், அதைச் சில வேளைகளில் சிரிக்கும் கழுதைக்குடத்தி என்று கூறுவதுமுண்டு.

இதுவரைக்கும் கூறிய மிருகங்களைத் தவிரக் காட்டு நாய் என்றோர் இனமும் உண்டு. அதன் தன்மைகளும் வடிவமும் ஏறக்குறைய ஓநாயையும் நாயையும்போலிருக்கும். இம்மிருகங்களே நாயினத்தைச் சேர்ந்தவையாகும். வேறு சில மிருகங்கள் நாயினத்திற்கு எட்டின உறவுகளாகும்.

C. L. S. PRESS, MADRAS—1928